


# காஞ்சி

வார இதழ்

நிறுவனர்: அறிஞர் அண்ணா

மலர்: 10 | திருவள்ளுவராண்டு 2005 வைகாசி 12 (26-5-74) | இதழ்: 45


★

உள்ளே......


படமும் பாடமும் (2)
(அறிஞர் அண்ணா)

★

முல்லையும் பூத்தனையோ!
(இலக்கியம்)

★

அண்ணா பிள்ளைத் தமிழ்
(கவிதை)

★

அன்பு ஜீவன்!
(சிறுகதை)


★

## அண்ணா இல்லாத் தமிழகம்...?

(சண்முக. தாயுமானவன் - பொன்மலை)

நீயிலா தமிழகம் நிலவிலா வானமாய்
நிலமிதில் ஒளி குன்றுமே!
தாயிலாச் சேயென தனமிலா ஏழையாய்
தமிழினம் துயர் கொள்ளுமே!
ஆய்விலா அறிவினால் அடிமையாய் வாழ்ந்தார்க்கு
அண்ணாசொல் உணர் வூட்டுமே!
ஓய்விலா தொண்டாலே உலகமே மகிழ்வுற
உழைத்தவர் புகழ் வாழ்கவே!

மேடைகள் யாவுமே மேலான இவர்பேச்சில்
மெத்தவும் மயங்கி விடுமே!
வேடங்கள் போடாத வித்தகர் பேச்சினை
விருந்தென உல கேற்குமே!
தேடரும் கருவூலம் தென்னவர் சொத்தென
திருநாடு புகழ் சொல்லுமே!
ப டரும் புகழ்கொண்ட பண்பாளர் அண்ணாவை
பாருலகம் பாராட்டுமே!

ஆண்டுகள் கடந்தாலும் அண்ணாவின் திருநாமம்
அனைவரின் உளம் நிலைக்குமே!
மாண்புடன் தமிழ்காத்த மன்னனின் பேர்கூற
மனமெலாம் களி கொள்ளுமே!
தீண்டிடும் வறுமையை தீய்த்திடும் கொள்கையில்
திளைத்தவர் நெறி வெல்கவே!
மூண்டிடும் பழம்போக்கை மூடப் பழக்கத்தை
மோதியவர் புகழ் வாழ்கவே!

★

விலை: 0-25 காசு

# முல்லையும் பூத்தனையோ!

ந. இறைவன், பி.ஏ.,

வண்ணத்தில் பூத்துச் சிரிக்கின்ற மலர்க் காவில், தன் எண்ணத்தில் பூத்துச் சிரிக்கும் எழிற்பாவையைக் கண்ணெதிரில் கண்டு களிப்பெய்தக் காத்துக்கிடந்தான். தாள்படு குழலாள் என்று அவளழகைச் சொல்லவா? அன்றிச் செவிபடு விழியாள் என்று அவள் வேல்விழியைச் சொல்லவா என்று அவள் அழகை தமிழ்படுத்திக் கொண்டிருந்தான்.

அவள் நினைப்பு வருகின்றபோது இன்பம் இன்பம் என்கிறார்களே, அது இதுதானா என்பான். அவளை நேரில் காண்கின்றபோது இன்பத்திற்கோர் எல்லை எல்லை என்கிறார்களே, அது இதுதானா என்பான். அவளை நினைத்தாலும் இன்பம். நேரில் கண்டாலும் இன்பம். நினைப்பதிலும் காண்பதுமே இன்பம் என்றாள், அவளைத் தொடுவதிலும் வளைப்பதிலும்... அதற்கு என்ன பெயர்! என்ன பெயர்! என்று புதியதோர் சொல்வடிக்கத் துடிதுடித்துக் கொண்டிருந்தான்.

காவியம் ஒன்றிற்கு ஆயிரம் ஆயிரம் ஓவியம் தீட்டலாம். ஆனால் ஓவியம் ஒன்றை வைத்துக் காவியம் ஒன்றேனும் படைக்கமுடியுமா என்ற ஐயம் அவனுடைய உள்ளத்தில் நெடுநாட்களாகக் குடிகொண்டிருந்தது. ஆனால், அவன் நெஞ்சின் ஓவியத்தைவைத்துக் காவியம் ஆயிரமாயிரம் படைக்கலாம் என்ற விளக்கத்தைப் பெற்றான், அவளது உருவம் அவனது இதயத்தில் இன்பயாழை மீட்டியபோது, அவளது நடைக்கோர் காவியம்! அழகாக அசைகின்ற இடைக்கோர் காவியம்! படைகள் பலவென்றவனே! என் கண்ணின் கடையை நீ வெல்வையோ என்று கடைவிழியால் சிரித்துச் சிரித்து என்னைச் சிறகொடிந்த பறவையாக்கும் அவள் கண்ணின் கடைக்கோர் காவியம்! என்று அவன் இதயத்து ஓவியத்தை வைத்து எண்ணற்ற காவியங்கள் படைத்தல் எளிதென்றே சொன்னான்.

அவன் இதயத்து ஓவியம் வருவதைப் பார்க்கமுடியாமல் காவில் இருள் சூழ்ந்தது. அவன் தவித்துக் கிடந்தான் அவளைக் காண முடியாதோ என்றெண்ணி. நீலவானம் அவனுக்குத் துணை செய்வதுபோல் அடிக்கொருமுறை மின்னி மின்னி அவள் வருகையைப் பார்த்துக்கொள் என்று கருணை புரிந்தது அவனுக்கு. அவனும் மின்னலின் துணையில் மின்னல் இடையாளைத் தேடிக் கொண்டிருந்தான். அன்னமும் வந்தாள்.

பேசிப் பேசி இன்பம் குவித்து வந்த அவள் அன்றுமட்டும் பேசவே இல்லை. நாணித் தலைகவிழ்த்து நின்றாள். ஏனிந்த நிலை என்றான், சிலையவளோ தான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை என்பாள்போல் தலை தாழ்த்தியே நின்றாள்.

கலைவாழும் முழுமதியே பேசென்றான். என்னழகில் நிலையாமை என்ன கண்டீர் எனக் கேட்டாள். உன்னழகிலா? நிலையாமையா? என்று வினாக்குறியாக மாறினான். நிலையாமை என்னழகில் இல்லையென்றால், பின்னெதற்கு நிலையாமை உடைய முழு நிலவோடு என் முகத்தை ஒப்பிட்டீர் எனக் கேட்டாள். தங்கத்தில் வடித்துத் தளிர் போல் துவள்கின்ற செங்கயல் விழியாளே செந்தமிழோ நீ! என்றான். செந்தமிழே நானென்று சிரித்தோடி அருகில் வந்து நின்றாள். இந்தா பழமென்று கன்னமும் இதழும் காட்டிச் சிரித்தாள். இடர் செய்து கொல்கின்ற இதயத்து விளக்கே! பழம் தூங்கும் கொடியே! படர்க நீயென்று மார்பீந்தான். அவளோ ஆடாமல் அசையாமல் சிலைபோல் நின்றிருந்தாள்.

செதுக்காத சிலையேநீ. சிரிக்காமல் நின்றிருத்தல் எதற்காக? என்றவன் கேட்க, அவள் அவன் இள மீசைதனைச் சுட்ட! அடிக்கரும்பு இடையசைய நடை பழகும் வடிவழகு மதுப்பாவாய்! முடிவில்லாப் பேரழகே! முக்கனியின் பெருஞ் சுவையே! இதற்கா நீ சிரிக்கவில்லை! நீ எடு என்றால் பறக்குமிது! இதற்கா நீ சிரிக்கவில்லை! பளிங்கு சிலையே நீ பதுக்காதே உன் சிரிப்பை! என்று அவன் வேண்ட, இதழில் தவழ்ந்தது எழில் சிரிப்பு.

நாளை நமக்கு மணம் நடக்க இருக்கும் போது என்னை எதற்கு? இன்று இங்கு வரச்சொன்னீர் என்று அவள் குழைய, நாளைமுதல் நாம் இருவரும் காதலனும் காதலியும் அல்லவே! கணவனும் மனைவியும்

4-ஆம் பக்கம் பார்க்க

**பேரறிஞர் அண்ணாவின் சொற்பொழிவு:**

# அதிகாரக் குவியலால் டில்லியே கவிழும்!

அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான தக்க தருணம் வந்திருக்கிறது.

சட்டத்தைத் திருத்துவது என்பது பற்றி யாரும் எந்தவித நடுக்கமும் கொள்ளத் தேவையில்லை.

அரசியல் சட்டத்தை அலசி ஆராய்ந்து விமர்சித்துத் திருத்துவதற்கு சட்டத்தின் மூலம் வாய்ப்பளிக்க வேண்டும் என்று முன்னுள் மத்திய நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரே சொல்லியிருக்கிறார்.

திருத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்துவதற்குக் காரணமே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான்!

அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கும் — உள்நாட்டிலே ஒற்றுமை உண்டாக்குவதற்குமான அதிகாரங்களை மட்டும் மத்திய அரசு தன் பொறுப்பில் வைத்திருந்தால் போதும். மாநில அரசுகளின் வரவு விவகாரத்தில் மத்திய அரசு தலையிடத் தேவையில்லை.

பொதுவாக இன்றைய தினம் அரசாங்க நிர்வாக இயந்திரம் சரிவர இயங்கவில்லை.

இருப்பினும் பொதுமக்களின் ஊக்கமும் ஆக்கமும் இருந்தால் அரசாங்க நிர்வாக இயந்திரம் சரிவரச் செயல்பட முடியும் — அதைச் செம்மைப்படுத்த முடியும்.

மக்கள் சக்தியால்தான் நிர்வாக இயந்திரத்தைச் சரிவர இயக்க முடியும்.

வெள்ளைக்காரன்தான் இந்த நிர்வாக இயந்திரத்தையே கொடுத்துவிட்டுப் போனதாக சிலருக்கு நினைப்பு இருக்கிறது.

தமிழ் நாட்டில் சேரர்களும் சோழ மன்னர்களும்—பாண்டிய மன்னர்களும் ஆண்ட காலங்களையும் — வடநாட்டில் வேறு மன்னர்களின் அரசுகள் இருந்த நிலைமையையும் எண்ணிடும் போது அன்றைக்கே நம்முடைய நாட்டில் மிகச் சிறந்த முறையில் அரசு நிர்வாக இயந்திரம் செயல்பட்டு வந்தது தெரியும்!

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நல்ல அரசு இயந்திரம் நம் நாட்டில் இருந்திருக்கிறது.

தமிழர்கள் நீண்ட நெடுங்காலமாகவே அரசு நிர்வாகத்தை மிகுந்த திறம்பட இயக்கி வந்திருக்கிறார்கள் என்பதற்கானச் செப்பேடுகளும் கல்வெட்டு ஆதாரங்களும் இருக்கின்றன!

ஆனால் இடையில் அவற்றைச் சரிவரப் பயன்படுத்தத் தவறியதால் அரசு நிர்வாக இயந்திரத்தை துருப்பிடிக்க விட்டு விட்டோம். அப்படித் துருப் பிடித்துவிட்ட நிர்வாக இயந்திரம் சரிப்படுத்தப்பட வேண்டும்.

வணிகர்களும் — வழக்கறிஞர்களும்—மருத்துவர்களும் பிற பட்டதாரிகளும் அரசியலுக்கு வரவேண்டுமென்று எனது நீண்ட நாளைய விருப்பமாகும். பொதுவாழ்வில் இப்படிப்பட்டவர்கள் ஈடுபடாமல், யார் எப்படிப் போனுலென்ன என்று இருந்துவிடக் கூடாது.

மத்திய அரசிடமிருக்கும் அதிகாரங்கள் எல்லாம் மாநில அரசுகளுக்கு நியாயத்தின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அப்படி அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும்! வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது பல் வேறு அரசுகள் அதிகாரக் குவிப்பினுல்தான் அழிந்தன என்பது புலனுகும்!

குப்தப் பேரரசு, முகலாயப் பேரரசுகளெல்லாம் அதிகாரக் குவியலின் காரணமாகத்தான் சரிந்து போயின. அந்த நிலை நம்முடைய நாட்டிலும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்—அக்கறையின் விளைவாக இதைச் சொல்லுகிறேன்...

வெளிப்படையாக டில்லிப் பேரரசின் செயல் நமக்கு அறிவுறுத்துவது இதுதான்:

எந்த ஒரு காங்கிரசல்லாத அரசாங்கமும் நெடுங்காலம் இயங்குவதை டில்லி அரசு பார்த்துக்கொண்டிருக்க சகிக்காது! மேற்கு வங்கத்திலும் ஹரியானுவிலும் நடந்த அரசுகளைப் பற்றி மக்களுக்கு எந்தவிதமான அதிருப்தியும் இல்லை. ஆனுல் சிலருக்கு அது பிடிக்கவில்லை. ஆகவே அரசுகள் கலைக்கப்பட்டன. இன்றுள்ள அரசியல் சட்டம் எந்த மாநில அரசையும் கலைக்கும் அதிகாரத்தை டில்லிக்குத் தந்துள்ளது.

## வரவேற்கிறோம்!

சிறந்த சிறிய தரமான சிறுகதைகளையும், சுவையான இலக்கிய கட்டுரைகளையும்,

சூடான, சுவையான அரசியல் விமர்சனங்களையும், கட்டுரைகளையும் பெரிதும் வரவேற்கிறோம்.

அரசியல் விளக்கங்கள், விமர்சனங்களாயின் அந்தந்த வார புதன்கிழமைக்குள் அலுவலகத்திற்குக் கிடைக்க வேண்டும்.

ஆசிரியர்,
"காஞ்சி"

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அல்லவா! அதனால்தான் என் காதலியைக் கடைசி முறையாகச் சந்திக்கக் காவிற்கு வரசொன்னேன். உனக்கு விருப்பமில்லையோ உன் காதலனைக் கடைசி முறையாகச், சந்திக்க என்று அவன் அவளை மடக்க; நான் எண்ணியதையே நீங்களும் எண்ணியிருக்கிறீர்கள். இதிலே உங்களுக்கு என்ன பெருமை என்று அவனை அவள் மடக்க இருவருடைய பார்வையும் ஒன்றோடு ஒன்றாகிப் பிரிய முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது.

'முத்தெ'ன்றான் தன் கன்னத்தைக் காட்டி!

'முடியாது போ' என்றாள்!

ஏனென்றான்! நாளை இரவென்றாள்! முத்தென்றதை என் கன்னத்தில் முத்தமிடு என்று கொண்டனையோ? ...இல்லை! இல்லை!! இதோ ஆழ்கடல் முத்து! அணிந்துகொள் நீ என்று தன் கையில் வைத்திருந்த முத்தினை அவளிடம் கொடுத்தான். நாணத்தில் நின்றவளை எந்தெந்தக் கோணத்தில் நின்றவன் முத்தமிட்டானோ அவள் அறியாள். அவளைத் தன் அணைப்பினிலே கொண்டு சென்று அவளது தோழிகளிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பினான்.

நாளெல்லாம் நம் பாட்டைக் கேட்டுக் கேட்டு நாடெல்லாம் நம்மைப் புகழ்கிறது. அறிவிருக்கும் அடிக்கு அடி! அழகிருக்கும் சொல்லுக்குச் சொல்! என்றெல்லாம் உங்கள் பாட்டைக் கேட்டு நாடே புகழ்கிறது. அந்தப் புகழ்ச்சியைக் கேட்ட என் நெஞ்சம் நெகிழ்கிறது.

என் பாடலை மட்டும்தானா புகழ்கிறது நாடு. உன் ஆடலையும், ஆடலுக்குக் கூடி வரும் உன் பாடலையும், தேடிவந்து உன்னிடத்துக் குடிபுகுந்த உன் அழகினையும், கண்டவரும், கேட்டவரும் புகழ்மாரி பொழிகின்ற வார்த்தைதனைக் கேட்டுக் கேட்டு மகிழ்கிறேன் நான். இது அன்றோ பாடல் என்பாரும், இது அன்றோ ஆடல் என்பாரும்! இவையிரண்டும் மட்டுமின்றி யாழோ? குழலோ? குயிலோ? அன்றி இவள் குரல் தானோ எனப் புகழ்ந்து, இவளன்றோ பாடினி என்பாரும்! இம்மண்ணில் எங்கெங்கும் இருக்கின்றார் என்றெண்ணி இறுமாந்து வாழ்கிறேன்.

நாட்டிலே நம் இருவருக்கும் இருக்கின்ற புகழ்பற்றிப் பேச வரவில்லை நான். நம்மை வாட்டி வளைவெடுக்கும் வறுமை பற்றிப் பேசவந்தேன். தென்றலினும் இனிமையான இசை மழை பொழிகிறோம். ஆனால் தென்றலைச் சுவைக்க வேண்டிய நேரத்தில் தீயில் அல்லவா வாடுகின்றோம்—பசியில் அல்லவா சாகிறோம்.

ஒல்லையூர் எல்லையுள் வந்தாகிவிட்டது. இனி இல்லையெனும் தொல்லைபற்றி பேசிக் கொண்டிருக்காதே என்று எத்தனைமுறை சொல்வது. ஒல்லையூர் எல்லையுள் கால்வைத்தால் தொல்லைகள் உங்களைத் தொடராது என்று வழியிலே கண்ட பாணன் கூறிய கூற்றையுமா மறந்தாய்! இல்லையெனும் சொல்லுக்கு இது தான் எல்லையென ஒல்லையூர் எல்லை சொல்லிக்கொண்டு உங்களை வரவேற்கும் என்றதையுமா மறந்தாய்! பாடித் திரிகின்ற நம்மை ஏன் இந்த நாடு வாடிக்கிடக்க செய்கிறது என்று கேட்கிறாய்! மயில் ஆடுகிறது. கண்டவர்கள் மகிழ்கிறார்கள். குயில் கூவுகிறது. கேட்டவர்கள் நெகிழ்கிறார்கள். மயிலும் குயிலும் ஆடவும் பாடவும் செய்யுமே தவிர, தங்கள் ஆடலுக்கும் பாடலுக்கும் கூலி எதையும் கேட்பதில்லை. கேட்டால் கிடைக்கும். ஆனால் அவைகள் கேட்பதில்லை. நாமும் குயிலும் மயிலும் போலத்தான். நம்முடைய இசையைக் கேட்டவர்கள், பிறந்தால் இவர்களைப் போல் பிறக்க வேண்டும் என்று பேசிக் கொண்டு செல்வார்களே தவிர, கோடைக்கும் குளிருக்கும் இவர்கள் என்ன செய்வார்கள் என்று எண்ணிக்கொண்டு செல்லமாட்டார்கள். இன்பத்தை அனுபவிக்கும்போது அது எத்தனை தொல்லைகட்கு இடையிலே மலர்கிறது என்று எண்ணிப் பார்க்காது உலகம். அது குற்றமல்ல. இயல்பு.

புகழ்தான் நமது குறியே தவிர, பொருளல்ல என்பதை நினைவில்வை. நாம் காணச் செல்ல இருக்கின்ற ஒல்லையூர் மன்னன் கலையார்வம் கொண்டவன் மட்டுமல்ல! கலைஞனுமாவான். அவன்முன் நாம் காட்டப்போகின்ற கலையில் குறையேதும் நிகழாமல் பார்த்துக்கொள், அதற்கு ஆயத்தமாகு! ஆசைகளை விடு' என்று பாடினி ஒருத்தியும் பாணன் ஒருவனும் பேசிக்கொள்கின்ற பேச்சு; தன் காதலியைக் கடைசி முறையாக கண்டு. அவள் இதழில் தேன் சுவையை உண்டு; தேன் கொடுத்துக் களைத் தவளைத் தன் அணைப்பில் கொண்டுசென்று அவளது தோழிகளிடம் ஒப்படைத்துவிட்டு மீண்ட ஒல்லையூர் மன்னன் காதில் விழுகிறது.

பாணனும் பாடினியும் பேச்சை முடித்துக்கொண்டு யாழெடுத்து இசை எழுப்புகின்றனர். கொட்டும் குளிரில் அவர்களுடைய பல் கொட்டும் பறை பெரும் இசை

13-ஆம் பக்கம் பார்க்க

# தம்பிக்கு மடல்



## தம்பி !

ஒரு ஜனநாயக நாட்டிலே இடங்கள் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை எத்தனை கிடைத்தன என்பதை மட்டுமல்ல, ஓட்டுகளின் எண்ணிக்கையையும் கூர்ந்து பார்த்துத்தான், அரசியல் போக்கு, எப்படி உருவாகிறது என்பதைத் தெரிந்துகொள்வார்கள்—எதிலும் தெளிவு வேண்டும் என்ற கொள்கை கொண்டவர்கள், அந்த முறையிலே தி. மு. கழகம், பெற்றிருக்கும் ஓட்டுகளின் எண்ணிக்கை, பலப்பல அரசியல் தலைவர்களை, மலைக்கச் செய்திருக்கிறது. அதனை மறைத்துச் சிலர் பேசுவர், உண்மையை நேருக்கு நேர் சந்திக்கக் கிலி கொள்பவர்கள், உள்ளத்தைக் காண மறுக்கிறார்கள்,

உலகமே, ஒரு ஒப்பற்ற சம்பவமாகக் கருதத்தக்க விதத்தில், கேரளத்தில் கம்யூனிஸ்டு கட்சி மகத்தான வெற்றி பெற்றிருக்கிறது-ஆளும் கட்சியாகிவிட்டது.

ஆச்சரியத்தால் மூர்ச்சையானவர்களும் அச்சத்தால் தாக்குண்டவர்களும், கலக்கத்தை மறைத்துக் கொண்டு கம்யூனிஸ்டுகள் இனிப் பெட்டிப் பாம்புதான் என்றும், சட்டசபை அவர்களுக்குச் சிறைக் கூடமாகிவிடும் என்றும் அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று கொட்டி அளந்து வந்தார்களே, கொடி தூக்கிக் கொண்டு இதோ இனி என்ன சாதிக்கப் போகிறார்கள் பார்த்து விடுவோமே இவர்களின் ஆற்றலை என்றும், பலவிதத்தில் பேசி, தோல்வியால் ஏற்பட்ட துயரத்தை மறைத்துக்கொள்ள முற்பட்டிருக்கின்றனர், மூக்கறுபட்டவர்கள்-ஆனால், உலகவரலாற்றிலேயே, நேரு பண்டிதரின் புகழ் உலகில் எங்கும் பரவி இருக்கும் நேரத்தில், பாரில் எமது நேருவுக்கு நிகர் யாரே! என்று பாவாணர்கள் பாடிடத்தக்க நிலை இருக்கும்போது, அவருடைய பெரும் புகழொளி கண்டும் மயங்கமாட்டோம், காங்கிரசுக்கு அடிபணிய மறுக்கிறோம் என்று துணிந்து கூறி, கம்யூனிஸ்டு ஆட்சிக்குக் கேரளம் அழைப்பு விடுத்துள்ள சம்பவம் அகில உலகும் அச்சமோ ஆயாசமோ, உணர்ச்சியின் வகை எப்படிப்பட்டதாக இருப்பினும் கூர்ந்து கவனிக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும், வரலாற்றிலே பொறிக்கப்படத்தக்க சம்பவமாகும்.

பளிச்சிட்டுத் தெரியும் இந்தச் சம்பவத்துக்கே, 'இந்து' இதழ் புள்ளி விவரத்தின் துணையைத் தேடி, இடம் அதிகம் கிடைத்திருக்கிறது, என்றாலும் கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கிடைத்துள்ள ஓட்டுகள், காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்ததைவிடக் குறைவுதான்! என்று வாதாடுகிறது. கம்யூனிஸ்டு கட்சிக்கு 19,89,369—காங்கிரசுக்கு 21,62,000 ஓட்டுகள்.

கேரளத்துச் சம்பவத்துக்குப் பயன்படும், வாதம், தி. மு. கழகத்துக்குக் கிடைத்த இடங்கள் பதினைந்துதான் என்றாலும், கிடைத்த ஓட்டுகள் ஏராளம் என்று கூறும்போது மட்டும், சொத்தை வாதம், மீசையில் மண் ஒட்டவில்லை என்பதுபோன்ற பேச்சு, என்று எப்படி ஆகிவிடும்.

தம்பி! உன் அரிய உழைப்பும் பிறர் கண்டு பாராட்டத்தக்க ஆற்றலும், வீண் போகவில்லை; நாட்டு மக்களை நித்த நித்தம் சந்தித்து உரையாடி நமது கொள்கைகளை எடுத்துக்கூறியது பலன் அளிக்காது போய் விடவில்லை; இந்தத் நேர்தலில் மொத்தத்தில்

# படமும் பாடமும் (2)

நமக்கு 16 இலட்சத்துக்கு மேல் ஓட்டுகள் கிடைத்துள்ளன; ஏ! அப்பா! எத்தனை விதமான எதிர்ப்புக்களுக்குப் பிறகு தாக்குதல்கள் எவ்வளவு கீழ்த்தரமானவை, எவ்வளவு ஈனத்தனமான செயல்களால் நம்மை அழிக்க முனைந்தனர், எவ்வளவு மிருகத்தனமான முறைகளைக் கையாண்டனர், தப்பித் தவறி காட்டு வழி சென்றுவிட்டவனைத் தாக்க மிருகங்கள் எப்படிக் கிளம்புமோ, அப்படி அல்லவா, நமது கழகத்தின்மீது பலரும் பாய்ந்தனர்; என்னென்ன பழிச்சொற்கள், எவ்வளவு வதந்திகள்! இவ்வளவுக்கும் நாம் கலங்காதிருந்தோம் என்பதல்ல ஆச்சரியம். இவ்வளவு பேச்சுக்களையும் துச்சமானவை, குப்பை கூளம், நொந்துபோன உள்ளத்திலிருந்து கிளம்பும் நாராசம் என்று கருதி, மதிப்பளிக்க மறுத்து, நாட்டு மக்களில் 16-இலட்சம் பேர், நமது கழகத்துக்கு ஓட்டு அளித்தனரே. அது அல்லவா ஆச்சரியம். மான்செஸ்டர் கார்டியனுக்கு இது தெரியாது; இப்போது தெரிவித்தாலும் புரியாது. ஆனால் இவ்வளவு எதிர்ப்பு நெருப்பை நீந்தி, நம்மில் பதினைந்து பேர், வெற்றியை அடைந்தோமே, அது நேர்மை உள்ளம் உள்ள மதிப்பினை, நிச்சயமாக அதிகப்படுத்தி இருக்கிறது என்பதிலே ஐயமில்லை.

நமக்கு எவ்வளவு எதிர்ப்புக்குப் பிறகு இத்துணை ஓட்டுகள் கிடைத்தன என்பது மட்டுமல்ல நான் உன்னைக் கவனிக்கச் சொல்வது. நாம் எவ்வளவு தவறுகள் செய்திருக்கிறோம், அவ்வளவுக்கும் பிறகு நமக்கு இந்த அளவு ஆதரவு திரண்டதே அதனைக் கவனிக்கச் சொல்லுகிறேன்.

என்னைப் பொறுத்த வரையிலும சரி என்னுடன் மிக அதிகமாக நெருங்கிப் பழகிடும் என் தம்பிமார்கள் பலரைப் பொறுத்த வரையிலும்கூட, கடந்த பத்து பதினைந்து ஆண்டுகளாகவே தேர்தலில் ஈடுபடுவது என்றாலே, ஒருவிதமான 'கசப்பு' இருந்து வந்தது. ஓட்டுகேட்பது என்பதையே ஏதோ செய்யத்தகாத செய்ய தேவையற்ற ஒரு காரியம் என்று கருதி வந்திருக்கிறோம். இந்த நாட்டு மக்கள் யார் எதைச் சொன்னாலும், இனிக்க இனிக்கச் சொன்னால் எதனையும் நம்பி விடுகிறார்கள், நாம் கூறும் உண்மைகளோ மக்களுக்குக் கசப்பாகவும் கிலி மூட்டுவதாகவும் இருக்கின்றன, அதனாலேயே, நம்மை அவர்கள் வெறுக்கிறார்கள், இந்த நிலையில் அவர்கள் நமக்கு ஓட்டுத் தருவார்களா என்ன! செச்சே! நமக்கேன் பல்லிளிக்கும் வேலை! பொறி பறக்கப் பேசுவோம்! அச்சத்தை தாட்சணியத்துச்கு இடம் வைக்காமல் பேசுவோம்! கேட்டால் கேட்கட்டும் கேட்காவிட்டால் நாசமாய்ப் போகட்டும்! ஊதுகிற சங்கினை ஊதுவோம் பொழுது விடிகிற போது விடியட்டும்! என்று இவ்விதமாகவெல்லாம் நினைத்துக் கொண்டு இயக்கப் பணியாற்றிக் கொண்டு வந்திருக்கிறோம், அப்படிப்பட்ட நாம் தேர்தலில் ஈடுபட்டபோது, அதிலே மிகுதியான சுவையும், அந்தச் சுவைமட்டுமே தரக்கூடிய சுறுசுறுப்பும், எங்ஙனம் பெற முடியும்.

உன்னிடம் கூறிக்கொள்வதிலே தவறு என்ன தம்பி! நான் காஞ்சிபுரம் தொகுதியில், நல்ல முறையில்தான் பணியாற்றினேன். ஆனால், பொதுக்கூட்டத்திலேயும் சரி, தனித்தனியாக மக்களிடம் அணுகிய போதும் சரி 'ஓட்டு' தரச்சொல்லி, கேட்க முடியவே இல்லை; விருப்பமில்லாததால் அல்ல முறை தெரியாததால்; உடன் வந்தவர்கள் தான் பேசுவர், நான், நாக்கு கட்டுண்ட நிலையில் நிற்பேன்; மெத்தச் சிரமப்பட்டு, நான் சொல்லக் கூடியதெல்லாம்,

பார்த்துச் செய்யுங்கள்
கூட இருங்கள்
வரட்டுமா!
என்ன? செய்கிறீர்களா!

என்று இவைகளே தான்! மேலால் பேசமுடியவில்லை — தெரியவில்லை. அதுபோன்றே, நான் பேசிய பொதுக்கூட்டங்கள் ஏராளம்-இரண்டே இரண்டு கூட்டங்களிலேதான், எனக்கு 'ஓட்டு' போடுங்கள் என்று கேட்க முடிந்தது—உதயசூரியன் பெட்டியில் ஓட்டு போடுங்கள் என்று கேட்டேன், உடனிருந்த நண்பர் கூட, அப்பா! பரவாயில்லையே! அண்ணா ஓட்டுபோடச் சொல்லிக்கேட்டு விட்டாரே! என்று வேடிக்கையாக வியந்துரைத்தார்!

என் நிலைதானே, நமது அபேட்சகர்களிலே பலருக்கும் இருந்திருக்கும். பல ஆண்டுக் காலமாக

பொறிபறக்கப் பேசுவது
கண்டதுண்டமாக்கிக் காட்டுவது
எதிர்ப்பு வாதங்களை முறியடிப்பது
விளக்கம் தருவது
வீரமுழக்கம் புரிவது
வரலாற்றுச் சம்பவம் தருவது

போன்ற முறைகளிலேயே பழகிப் போயிருக்கிறோம். அப்படிப்பட்ட நாம் மக்களிடம் கனிவாகப் பேசி, அவர்கள் அலட்சியம் காட்டினால் தாங்கிக்கொண்டு, புரியாதவர்களாக இருந்தால் பொறுமையை இழக்காமல், ஓட்டு கேட்கும் முறையை, எப்படி

தயாராகிறது!

# 'காஞ்சி'

## கலைஞர் பொன்விழா மலர்.

பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றல்
கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களின்
புகழ்மணம் பரப்பும் நன்மலர்,
இப் பொன்மலர்!

முன்னணித் தலைவர்கள்
முற்போக்கு எழுத்தாளர்கள்
ஆகியோரது அரிய படைப்புக்களுடன்
மூவண்ண முகப்போடு ஜூன் திங்களில் வெளிவருகிறது!

தேவைக்கு உடன் தொடர்பு கொள்க:-

—மேலாளர் **"காஞ்சி"**
காஞ்சிபுரம் 631503.

எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும். கேள், தம்பி! என் கதையை!! தங்கவேலர், என்னை 'ஓட்டு' கேட்பதற்காக, முதல் நாள் கோவிந்தவாடி என்ற கிராமத்துக்கு அழைத்துக் கொண்டு சென்றார்- அழைத்துக் கொண்டு சென்றார் என்று கூறுவதைவிட, இழுத்துக்கொண்டு சென்றார் என்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

நாலைந்து கிராமத்துப் பெரியவர்களைச் சந்தித்தோம்—சந்தித்தோம் என்று கூறுவதைவிட, எங்களைப் பார்க்கும்படி சிரமப் பட்டு அவர்கள் எதிரில் சென்று நின்றோம்.

தங்கவேலர், துவக்கினார், "இதோ—நம்ம அண்ணாதுரை—நம்ம தொகுதிக்கு நிற்கிறார்—சட்டசபைக்கு—நல்லவர்—படிப்பாளி—தமிழ் நாட்டில் ஒரு தலைவர்—" என்று விவரித்தார்.

கேட்டுக்கொண்டிருந்தவர்கள் முகத்திலே ஒரு விதமான மலர்ச்சியும் இல்லை; எனக்குச் சிறிதளவு வெட்கமாகக்கூட இருந்தது.

சில நிமிடங்கள் தங்கவேலர் பேசிவிட்டு, பிறகு, கிராமத்துப் பெரியவர்களின் பதிலை எதிர்பார்த்தார்! தம்பி! பதில் வெளிவந்தது, நான் பயந்துபோனேன், கோபம் கூடத்தான்!!

"அது சரிங்க! எலக்ஷனுக்கு வருகிற ஒவ்வொருத்தரையும்தான் இந்திரன் என்று சொல்றிங்க, சந்திரன் என்று சொல்றிங்க, நாங்க என்னத்தைக் கண்டோம்"

இது அவர்கள் அளித்த பதில்! ஓட்டு கேட்கச் சென்ற எனக்கு எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப்பாரேன் தம்பி!

கோவிந்தவாடி, காஞ்சீபுரத்துக்கு வெகு அருகாமையில் உள்ள சிற்றூர்—ஐந்தாறு மைல்களுக்குத்தான் தொலைவு. அங்கு, இவ்விதம், "வரவேற்பு!". எப்படி இருந்திருக்கும், என் எண்ணம் என்பதை நினைத்துப் பாரேன்!

ஓட்டு கேட்டுக் கேட்டுப் பழக்கமாகி இருந்தால், இவ்வளவு அக்கறையற்றும், அலட்சியமாகவும் பேசியவர்களிடம், மளமளவென்று பதில் பேசிடத் தெரிந்திருக்கும். நமது கழகம் தான் தேர்தல் அலுவலில் இதுநாள்வரை ஈடுபடவில்லையே, எனவே பதில் ஏதும் கூறத் தோன்றவில்லை!

(வளரும்)

**சிறுகதை :**

# அன்பு ஜீவன்!

பெ. செல்வராஜ்

சுந்தரம் வசந்தியின் அண்ணன். முன்கோபி. எதற்கெடுத்தாலும் கோபப்படும் அவனிடத்தில் எடுத்ததற்கெல்லாம் உணர்ச்சி வயப்படும் பழக்கமும், எவரின் பாலும் சட்டென்று இரக்கங்கொண்டு இரங்கி விடும் இதயமும் விசித்திரமான மனோபாவமும் அமைந்திருந்ததிலும் அதிசயமில்லைதான். அவனை முழுதுமாக உணர்ந்து கொண்டவர்கள் இன்றுவரை அவனை பெற்றவள் உட்பட ஒருவருமே இல்லை என்பது உண்மை.

ஒரு தடவை அஞ்சி நடுங்குவான். மறுதடவை திடீரென்று சீறிப்பாய்வான். ஒருதடவை சாந்தம் தவழும் முகத்தோடு மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருப்பவன் மறுதடவை திடீரென்று முற்றிலும் மாறி விடுவான். முன்பிருந்த மலர்ச்சியை இப்போது அவனிடத்தில் காண்பது கடினம்.

குடும்பத்தின் மூத்த மகனான அவன் அவன் தாய் தந்தையரின் பாரங்களை தான் சுமந்து அவர்களுக்கு ஓய்வளிக்க வேண்டுமென்று என்னும் போதெல்லாம் அதற்கு இன்றுவரை எவ்விதமான சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை என்று வருந்தும்போதெல்லாம் அவன் இப்படி மாறி விடுவான்.

இப்படிப்பட்ட ஒரு விசித்திரமான பிறவியைத்தான் சுந்தரி நேசித்தாள். இந்த நேசம் இருவரிடையேயும் சேர்ந்து வெகு நாட்களாகி விட்டதெனினும் சமீபத்தில்தான் அது அவர்களிடத்தில் காதலாக பரிணமித்தது. ஆம்; அவனை அவளும், அவளை அவனுமாய் ஒருவருக்கொருவர் தத்தம் உள்ளங்களில் இருத்தி ஆராதனை செய்துகொண்ட நாட்கள் அதிகம். ஒருவருக்கொருவர் தத்தம் காதலை தெரிவித்துக் கொள்ளாமலேயே அதை அதிக அளவில் வளர்த்துக் கொண்டு விட்டிருந்தனர். அப்படிப்பட்ட நேசம்தான் சில நாட்களுக்குமுன் ஒருநாள் தத்தம் ஆசையினை பகிர்ந்து கொண்ட நேரத்தில்தான் அது அவர்களிடத்தில் காதலாக பரிணமித்து மணம் வீசத் தொடங்கியது.

வசந்தியின் வீட்டில் ஏதாவது விசேடம் நடக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பாள் சுந்தரி. அவர்கள் வீட்டில் விசேடம் என்பதே பொதுவாக தாய்க்கும் மகனுக்குமிடையே நடக்கும் சிறு பூசல்கள்தான். ஏனென்றால் இருவருமே பிடிவாதக்காரர்கள். என்னதான் பிடிவாதமிருந்தாலும் கடைசியில் தாய்மைதான் பணிந்து சென்றுவிடும். பயத்தினால் அல்ல, பாசத்தினால். இந்த மாதிரியான பூசல்களை வைத்துதான் சுந்தரி வசந்தியின் வீட்டினுள் நுழைய முடியும். இல்லையென்றால் நுழைவதற்கான காரணத்தை வசந்தியின் தாயாருக்கு காட்டியாக வேண்டுமே.

ஆம்; சுந்தரி உள்ளே நுழைவாள். எரிமலையாய் கொதித்துக் கொண்டிருக்கும் சுந்தரத்தின் உள்ளம் அவளது நிழல்பட்ட மாத்திரத்தில் குளிர்ந்து பாகாய் உருகிவிடும். கோபம், ஆத்திரம் இவையெல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்துவிடும். சமாதானக் கொடி பறக்கத் தொடங்கி விடும். சுந்தரியின் எந்த செயலுக்கும் அவளது பெற்றோர் முட்டாக நிற்பதில்லை. காரணம் அவள் அவர்களுக்கு ஒரேமகள். செல்லமகள்.

'வசந்தி வாடி போகலாம்', என்று உள்ளே சென்று தன் தாயிடத்தில் அனுமதி வாங்கி வந்து விட்டாள் சுந்தரி. வசந்தியின் வீட்டுக்கு செல்லவே வசந்தியை இவ்வாறு அழைத்தாள் சுந்தரி. வசந்தி இதை புரிந்து கொண்டவளாய் பதிலொன்றும் சொல்லாமல் எழுந்து நடந்தாள். தனது தமையனுக்கும் தோழிக்கும் உள்ள காதலை அவள் நன்கறிவாள். தோழி சொல்லவில்லையென்றாலும் தமையன் சுந்தரம் அவளிடத்தில் எல்லாவற்றையும் சொல்லி விடுவான். தங்கையிடத்தில் எதையும் ஒளிவு மறைவில்லாமல் பேசும் சுபாவம் சுந்தரத்திற்கு.

வசந்தியும் சுந்தரியும் வீட்டில் நுழைந்த சமயம் வசந்தியின் தாயார் அங்கு இல்லை. அவள் எங்கோ வெளியில் போயிருந்தாள். இது சுந்தரியின் உற்சாகத்தை மேலும் அதிகரித்தது. உள்ளே சுந்தரம் ஒரு மூலையில் படுத்திருந்தான்.

வசந்தியும் சுந்தரியும் உள்ளே நுழைந்ததை கண்டும் காணாதவனைப்போல் படுத்திருக்க, உள்ளே நுழையும்போது சுந்தரத்தை கவனித்துவிட்ட சுந்தரியும் மிடுக்காக அவனை காணாததுபோல் 'ஏண்டி வசந்தி யானைக்கு கொழுப்பு ஏறிப்போச்சுண்ணு

அது தன் தலையிலேயே மண்ணை வாரி போட்டுக்கும்னு சொல்லுவாங்களே, அப்படி அது மண்ணை வாரி போட்டுக்கிட்டா யாருக்குடி நஷ்டம்?'—இப்படி ஜாடையாகவும் குத்தலாகவும் கேட்டாள் சுந்தரி.

'யாருக்கு நஷடம்? யானைக்குத்தான் நஷ்டம்!'—இது வசந்தி

'அட அதுதான் யானை. பகுத்தறிவில்லாத மிருகம். அதுக்கு இந்த நஷ்ட லாபத்தைபத்தி புரியாம இருக்கலாம். ஆனால் மனுஷங்கள்ளேயும் இதுமாதிரி சில புரியாதவங்க இருக்காங்களே அவங்களை என்னடி சொல்றது'—இது சுந்தரி. உடனே சுந்தரம் அவளை முறைத்து பார்க்கிறான்.

'என்ன முறைச்சா எப்படி? எழுந்து சாப்பிட்றது. எதுக்கெடுத்தாலும் உண்ணா விரதம் கிடந்து இப்படி பட்டினி கிடந்தா உடம்பு என்னத்துக்கு ஆகறதுண்ணேன். பட்டினி கிடந்து சாகலாங்கிற நினைப்பு போல இருக்கு. அத்தனை சுலபத்தில் செத்திட முடியுமா என்ன? எத்தனை ஜீவன்கள் இந்த ஒரு ஜீவனை நம்பி கிடக்குதுங்க. இந்த மண்ணுங்கட்டி ஜீவனுக்கு புரியவே மாட்டேங்குதே ஏன்? ஹம், ஹிம் எழுந்து சாப்பிடலாமே' சுதந்தரத்தை சுட்டினாற் போல் வசந்தியை பார்த்தபடி ஜாடையாக இப்படி சொன்னாள் சுந்தரி.

சுந்தரத்தின் மனத்தில் எத்துணைதான் துயரங்கள் அப்பிக்கிடந்தாலும் சுந்தரியின் இதுபோன்ற வார்த்தைகள்தான் எத்துணை ஆறுதல் மொழிகளாக இருக்கிறது. சுந்தரத்தின் மனம் தெளிவடைநது விட்டது. அவன் எழுந்து விட்டான் சாப்பிட.

'ஏண்டி இன்னும் நிக்கறே. போயேன். போய் தட்டை எடுத்து வைச்சு சாப்பாட்டை போடேன்' வசந்தியை தூண்டினாள் சுந்தரி. 'ஆமாம், உங்க வீட்டில என்ன குழம்படி?' மீண்டும் சுந்தரியே தொடர்ந்தாள்.

'முருங்கைக் கீரை சாம்பாரடி' சுருக்கமாக வநதது பதில்.

'எப்போ பார்த்தாலும் முருங்கை கீரை சாம்பார்தானா? எங்க வீட்டில் உருளைகிழங்கு குழம்பும் கோசு பொறியலும்டி, என்று தன் வீட்டிற்கு சென்று அவைகளை கொண்டு வந்து, நீயேதான் ஊத்திக்கிட்டு சாப்பிடனும் என்று கூறினாள்.

உண்மையில் அவள் உருளைகிழங்கு சாம்பார் கொண்டுவர ஓடியது சுந்தரத்திற்கென்றுதான். வசந்திக்கும் உருளைகிழங்குக்கும் பிடிமானமாகாது. வசந்தி இதை புரிந்து கொண்டு மெல்ல முருவலித்த அதேசமயம் சுந்தரத்தின் இதயத்திற்கு இரண்டு கால்கள் முளைத்து சுந்தரியின் பின்னேயே ஓடத் தொடங்கியது. இப்படி அவனுக்காக அவளும், அவளுக்காக அவனுமாய் நாட்கள் வெகு விரைவாக நகர்ந்து கொணடிருந்த அந்த இனியதான நாட்கள்; ஓ!...

அன்றொரு நாள் சுந்தரம் இரவு நேர சினிமா காட்சி பார்த்துவிட்டு வழக்கம் போல் தெரு திண்ணையின் மேல் படுக்கையை விரித்து போட்டு படுக்க வந்தவன் திடீரென்று இரும்ப ஆரம்பித்து விட்டான். தொடர்ந்தாற்போல் மூன்று மணி நேரம் உறக்கத்தை விடுத்து கண் விழித்து அந்த இரவு காட்சியை கண்டு களித்ததன் பலன் உடல் சூடாகி இருமல் பிடித்து கொண்டு விட்டது. அன்று அவன் தொடர்ந்தாற் போல் ஐந்து நிமிட நேரம் இருமிக் கொண்டிருந்ததை அந்த நள்ளிரவில் யாரும் உணர்ந்தாரில்லை. உள்ளே கதவு தாளிடப்பட்டு இருந்ததாலோ என்னவோ அவனது தாயாருக்கும் கூட அந்த இருமல் சப்தம் கேட்கவில்லை. ஆனால் அந்த இருமல் சப்தம் எப்படியோ எதிர் வீட்டு சுந்தரிக்கு கேட்டு விட்டது. ஒருவேளை அந்த அன்பு ஜீவனுச்கு மட்டும் தெளிவாக கேட்கும்படியான இருமலோ என்னவோ?

சுந்தரி வந்தாள். நேரம் நடு இரவென்பதையோ, தானொரு கன்னிப்பெண் என்பதையோ, தன்னை அந்த நேரத்தில் யாரேனும் பார்த்துவிட்டால் தவறாக பேச இடமுண்டாகி விடுமென்பதையோ அவள் அந்த நேரம் பொருட்படுத்தவில்லை. அவனுக்கு உதவி செய்ய அந்த அன்பு ஜீவன் தன் தாய் தந்தையரையும் ஏமாற்றி இதோ இங்கே சுந்தரத்தின் அருகில் வந்து விட்டது.

சுந்தரத்தின் அருகில் வந்தவள் மிக மெல்லிய குரலில் 'ஏன் இதுமாதிரி உங்களை நீங்களே கெடுத்துக்கிறீங்களோ தெரியலை! உங்களுக்கு வாழ்க்கையில் விரக்த்யா இருந்தா அதுக்காக ஏன் எனக்கு சொந்தமான உடலையும்! எனக்கு சொந்தமான உயிரையும் ஏன் இம்சிக்கணும்? இப்படி தொடர்ந்தாப்போல ராத்திரி தூக்கத்தை கெடுத்துக்கிட்டு சினிமா பார்த்தா இருமல் வராமல் என்ன செய்யும்? கொஞ்சமாவது பொருப்புணர்ச்சின்னு இருந்தா இப்படியெல்லாம் செய்வீங்களா?' என்றுக் கூறிக் கொண்டே அவனது மார்பிலும் முதுகிலுமாக கையோடு கொண்டு வந்திருந்த தைலத்தை நன்கு ஆனால் மென்மையாக தேய்த்துவிட்டாள். அவளது உள்ளத்தைப் போலவே அவளது கரங்களும் மென்மையாக இருந்தன. அவள் இப்படியும் அப்படியுமாக

கையை அசைக்கும் போது ஏற்பட்ட வளையல் ஒலி அவனை எங்கோ கொண்டு சென்றன. அவன் நெகிழ்ந்து போனான். அவளது தூய அன்பில் இரங்கி போனான்.

'எனது இன்ப துன்பங்களில் பங்கெடுத்துக் கொள்ள இறைவன் எனக்கென்று ஒரு பாவையை படைத்து அவளை உரிய நேரத்தில் என்னுடன் சேர்த்துவிட்டான். எனக்கென்று ஏதும் தந்திலாத இறைவன் ஒரு ஜீவனை அன்பு ஜீவனை கொடுத்து என்னை மீளாத சுகத்தில் மிதக்க விட்டு விட்டான். இறைவா! எனக்கு இதுபோதும். இறைவா! இந்த உனது அன்பளிப்புக்காக நான் என்றென்றும் உனது அடிமையாக இருக்க சித்தமாயிருக்கிறேன்.' இப்படி மனதுக்குள்ளேயே புலம்பியவன் கண்களில் கண்ணீர் பனித்தன.

இதேபோல் சுந்தரியின் கண்களின்றும் கண்ணீர் துளிகள் தெரிந்து அவன் முகத்தின் மேல் விழுந்து அவனது அந்த கண்ணீரோடு சங்கமாக நெஞ்சுக்கு கீழே வேகமாக ஓடி மறைந்துக் கொண்டிருந்தன. அவனையறியாமலே அவனது கைகள் அவளை இருக அணைத்துக் கொண்டன. அங்கே இரு காதல் நெஞ்சங்களின் உன்னதமான பிணைப்பு சங்கமமாகிக் கொண்டிருந்தன.

'அப்பா...அப்பா! எழுந்திருங்கப்பா பொழுது விடிஞ்சு போச்சு'

சுந்தரம் கண் விழித்தபோது ஐந்து வயது சிறுமி யொருத்தி அருகில் நின்றுக் கொண்டிருந்தாள். பொழுது புலர்ந்து விட்டிருந்தது. இளமையின் இனியதான கனவுகளில் சஞ்சரித்துக் கொண்டிருந்தவன் பொழுது புலர்ந்ததுகூட தெரியாமல் படுத்துக் கொண்டிருந்தான். அவன் சுற்று முற்றும் பார்த்தான். அந்த வீடே வெறுமையாக தென்பட்டது அவனுக்கு.

ஆம்; அவன் இதுவரை கடந்தகால நிகழ்ச்சிகளை அசைப்போட்டுக் கொண்டிருந்தான். ஓ! அதில்தான் எத்தனை ஆனந்தம்! அது கனவுதான் எனினும் அதில்தான் எத்தனை உயிர்த் துடிப்பு! எத்தனை ஜீவத் தன்மை!

இப்போது சுந்தரமும் சுந்தரியும் கணவன் மனைவி என்பது மட்டுமல்ல, அவர்கள் இருவரும் ஆறு பிள்ளைகளுக்கு தாய் தந்தையர். ஆம்; ஒன்றல்ல இரண்டல்ல, ஆறு பிள்ளைகள்!

குறைந்த வருவாய். நிறைந்த மழலைகள். சூழ்ந்த வறுமை. வாட்டும் கவலைகள். இப்படித்தான் அந்த காதல் தம்பதிகளின் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. கவலைகளின் அஸ்திவாரம் மிக உறுதியாக இருக்கும்போது அங்கே மழலைகளின் மொழிகள் இனிக்கவா செய்யும்? வெறுப்பும் விரக்தியுமே மிகுந்தன!

'சீ...சனியனே, உன்னை யாரு என்னை எழுப்ப சொன்னது? போ அந்தண்டா' அவன் அந்த சிறுமையை பிடித்து தள்ளினான். அவள் கீழே விழுந்து அலறினாள். அவள் அவனுக்கு மூன்றாவது மகள்.

ஆயிற்று இன்று தேதி ஒன்று. அது அவனுக்கு சம்பள தேதி. இன்னும் சிறிது நேரத்தில் பிள்ளைகள் தத்தமக்கு வேண்டியவற்றை பட்டியலிட்டு சொல்ல அவனை சூழ்ந்து கொள்வார்கள். அதற்கு மேல் மனைவி சுந்தரி வந்து நிற்பாள். வீட்டுக்கு வேண்டிய தேவைகளுக்காக அவள் வாய் திறந்து ஏதும் கேட்கமாட்டாள். கணவனின் வருவாயும் அவன் படும் வேதனைகளும் அவள் அறிந்ததே. அவள் தான் அவனை இளமையிலிருந்து புரிந்து கொண்டிருப்பவளாயிற்றே.

அதோ அவள் வந்து விட்டாள். வாசற்படியண்டை நின்று படுக்கையிலேயே உட்கார்ந்திருக்கும் சுந்தரத்தை நோக்குகிறாள். அந்த பார்வையில் ஒளியில்லை. ஓ... அன்றிருந்த கவர்ச்சி பொருந்திய சுந்தர ரூபமாகிய சுந்தரியின் முகமா அது. அதில் ஜீவத்தன்மையே இல்லையே. அந்த அவளது உயிர்துடிப்பை யெல்லாம் சௌந்தரத்தை யெல்லாம் அந்த ஆறு பிள்ளைகள் பகிர்ந்தெடுத்துக் கொண்டனர்களா? அந்த அழகு சிலை உருகுலைந்து நிற்கிறது. அவனது வாழ்க்கை வளம்குன்றி போய்விட்டது.

இப்போதெல்லாம் அவனது நினைவுகள் அவனையறியாமலேயே வீதியிலே வீட்டுக்கு வீடு எழுதி, விளம்பரம்படுத்தி வைத்திருக்கும் வாசகங்களிலேயே லயித்து விடுகிறது. ''திட்டமிட்ட குடும்பம் — தெவிட்டாத இன்பம்'' காலம் கடந்த லயிப்பு இனி அந்த இனிய காதலர்களின் வாழ்வுக்கு தேவையா என்ன?

★

# 'குட்டிக் கதைகள் ஒரு நூறு!'

—புலவர் அரிமதிதென்னகன்

## 58. புத்திசாலிகள்

இரயில் ஓடிக்கொண்டிருந்தது!!

முதல் வகுப்புப் பெட்டியில்,

இரு பெண்கள் மட்டுமே இருந்தனர்.

திடீரென்று,

இரண்டு வாலிபர்கள் சன்னல் வழியாக உள்ளே நுழைந்தனர்.

ஓடும் இரயில்!!

தனிமையில் இளம் பெண்கள்!!

வாலிபர்களின் திட்டம் பெண்களுக்குத் தெரிகிறது.

ஒருத்தி, ஒருவனிடம் சென்று,

"என்ன அண்ணா எங்கே போறிங்க?" என்றாள்.

மற்றொருத்தியும், மற்றவனிடம் அதே போல் கேட்டாள்.

சகோதரர்களாகத் தங்களை மதிக்கவே வாலிபர்களுக்குச் சங்கடமாகப் போய் விட்டது.

ஒருவனுக்கு ஒருயோசனை தோன்றியது.

"டேய், என் தங்கச்சி உனக்கு; உன் தங்கச்சி எனக்கு" என்றான்.

நண்பர்கள் மைத்துனர்களாக மாறிவிட்ட பிறகு,

தங்கைகள் கதி?

## 59. கண்முன் காட்சி

அவன்,

அவன் நண்பனிடம் வேகமாகச் சொன்னான்,

"அரசியல் என்பது அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்"

நண்பன் அமைதியாகச் சொன்னான்,

"உன்னைச் சந்திக்கும் வரை

அதை,

"நான் நம்பவில்லை"

## 60. பிரம்மன் பிழை

பல இரவுகளாகக் கண் விழித்துப் பிரம்மா மனிதப் பிண்டங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

எல்லாவற்றிற்கும் 'மூளை' வைத்து உயிர் கொடுக்க வேண்டியதுதான் பாக்கி வேலை.

தூக்கக்கலக்கம்!

நீண்ட நேரவேலை தந்த சோர்வு!!

சமாளித்துக்கொண்டே பிரமன் பிண்டங்களுக்கு எல்லாம் மூளையை வைத்து விட்டார்.

விடியப்போகும் நேரம்!!

வேலையை விரைவுபடுத்தினார்.

உறங்கப்போகும் ஆசையில் எல்லாப் பிண்டங்களுக்கும் உயிரைக் கொடுத்துப் பூலோகத்திற்கு அனுப்பிவிட்டார்.

படுக்கத் தலை சாய்த்தவர் பதறித் துடித்து எழுந்தார்.

"அடடா, வலப்பக்கத்துப் பிண்டங்களுக்குத் தானே மூளையை வைத்தோம்; இடப் பக்கத்துப் பிண்டங்களை மறந்து விட்டோமே...' உயிர்கொடுத்து அனுப்பிவிட்டோமே..."

பிரம்மாவின் தூக்கம் பறந்து விட்டது.

அதேநேரம்,

தமிழகத்தில் 'சிலது'கள் சிரித்துக் கொண்டே பிறந்தன.

பிரம்மா அழுதார்!!

"ஐயோ, பிண்டங்களை உருவாக்கி மூளையில்லாத முண்டங்களாக அனுப்பி விட்டேனே..."

இனி பிரம்மா அழுதால் என்ன?

சிரித்தால் என்ன?

நாளைக்கு 'அதுகள்' கள் எல்லாம் 'அண்ணாதுரை என்ன கிழித்தார்' என்றும் பேசும்; எழுதும்!!

★



# அன்று பிள்ளைத் தமிழ்

கவிஞர் தமிழ்ச்சுரபி

## 4. சப்பாணிப் பருவம்

1

கண்ணீரைச் சிந்த வைத்திடும் துன்பியலும்
களிமிகும் இன்பியலும்
கவர்ந்திடும் நாடகங்கள் கவியினில் யாத்து
கரைகண்ட சேகச்பியரை [மொழி
உண்ணின்ற உயிரழி யாதென்றும்
வெளியோடும்
உடலழிந்து மண்ணாய்ப் போகும்
உரைத்தவை ஏனெனக் கேள் எனுந் தத்து
உரைத்திட்ட சாக்ரடீச்சை [வத்தை
மண்ணின்ற மடமெலாம் மண்ணோடு
மாய்த்திட்ட இங்கர் சாலை [மண்ணாக
மாண்புமிகு நவரசம் கலந்திடும் நாடகங்கள்
வடித்திட்ட பெர்னாட் சாவை
தண்ணீரை விட்டலைந்து வனைத்திட்ட
உருவத்தன்
சப்பாணி கொட்டியருளே!
சங்கினுந் தூய்மைமிகு பங்காரு அம்மை
சப்பாணி கொட்டியருளே! [மகன்

2

அம்மைக்கு மப்பனுக்கும் நாளும் கொண்
அருமதலை தெய்வமாகி [டாடும்
ஆபத்து வருவேளை நண்பர்க்குக் கைகொடுக்
அரியதோர் தெய்வமாகி [கும்
கம்பனும் கவியினில் வருணிக் காற்றாத
க்வின்பொதி சுமந்துவந்த
கற்பரசி இராணி அம்மைக்குக் கணவனாகிக்
கண்கண்ட தெய்வமாகி
தம்பிக்குந் தமிழர்க்கும் தெய்வமாய் நின்ற
சப்பாணி கொட்டியருளே! [வன்
சங்கினுந் தூய்மைமிகு பங்காரு அம்மை
சப்பாணி கொட்டியருளே! [மகன்

3

களைத்துசிறு பரிசுள்ளி வேண்டிபெரு அவை
கைநீட்டி ஔவை நிற்க [யினில்
கடுகளவும் விண்டுளி இல்லெனக் கலங்கிதன்
கைபிசைந்து நின்ற கோன்போல்
வினைத்துயர்த் தீர்த்திட சென்னைநீதி மன்றத்
வேலையினைத் தேடிச் செல்ல [தில்
மேன்மைமிகு அதிகாரி மாவட்ட முன்சீப்பு
வேலைதனைப் பெற்று வாழ
களிப்புடன் பரிந்துரை செய்யுமா றிரந்திட
கண்வியந்து எழுந்து நின்று
கைத்துண்டை தோளமர்த்தி இரவலனாய்
கைவீசிப் புரவ லனாக [உட்சென்று
தளராது தயங்காது தலைநிமிர்த்தி வெளிவந்
சப்பாணி கொட்டியருளே! [தோன்
சங்கினுந் தூய்மைமிகு பங்காரு அம்மை
சப்பாணி கொட்டியருளே! [மகன்

4

தடமுன் காவாய் மரைமுன் சுரும்பாய்
தணல்முன் பொன்னாக
சாக்ர டீசுமுன் பிளாட்டோ வாக
சங்குமுன் னிதழாக
கடல்முன் கலங்கரை விளக்க மாக
கலப்பைமுன் காளையாக
கதிர்முன் னுலகாய் கார்முன் காற்றாய்
காந்திமுன் நேருவாக
கொடைக்குணப் பெரியார் முன்னே
கொட்டுக சப்பாணி [நின்றவ!
கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
கொட்டுக சப்பாணி

5

(வேறு)

வளமுற தமிழினம் மறுப்பிறப்
பெடுத்த வள்ளுவனே!
மனமெலாம் தெருவெலாம் தமிழ்மணம்
பரப்பும் மலர்க்காவே!
அளறினில் துயருறு குடிகளைப்
புரக்கும் மறவேந்தே!
அமரினில் பகைவரை அடுத்திறல்
கொண்ட பெருங்களிறே!
தளர்நடை விலக்கிய வனமரி!
கொட்டுக சப்பாணி
தமிழ்நடை புதுக்கிய ஒளிமணி!
கொட்டுக சப்பாணி

4-ஆம் பக்கத் தொடர்ச்சி

யாக இருக்கவே... குளிரில் வாடுகின்ற அந்த கலைஞர்களிடம் தேர்விட்டு இறங்கிச் சென்று' 'ஐயன்மீர் ஏனிந்தக் குளிரில் வாடுகிறீர் எனக்கேட்டு, இருவரையும் தேரில் ஏற்றிக்கொண்டு அரண்மனைக்கு செல்கிறான் மன்னன்.

பாணனும் பாடினியும் அரண்மனையின் அழகிலே திளைக்கின்றனர். பூக்களின் துணை கொண்டு செய்யப்பட்ட இரு பெண்ணுருவங்கள் வாயிலில் நின்றிருக்கும். மலர்களிலே செய்து நிறுத்தி வைக்கப்பட்ட போர்வீரர்களை அந்தப் பெண்கள் பார்த்துப் புன்முறுவல் பூப்பது போலிருக்கும். அத்தனையும் முல்லை மலர். முல்லைமனை என்கின்ற வகையில் அந்த அரண்மனை அழகை அள்ளி உதிர்த்துக் கொண்டிருந்தது. வியப்பில் மூழ்கிக்கிடந்த பாணனையும பாடினியையும் அரண்மனை உள்ளே அழைத்துச் சென்று அரண்மனையைச் சுற்றி வந்தான், முல்லை என்றால் எனக்கு உயிர். அதனாலேதான் முல்லையில் அலங்கரித்துள்ளார்கள் என்று அவன் சொல்ல! இவ்வளவு முல்லை என்று பாணன் வாய்திறக்க...! எங்கே விளைகிறது என்றுதானே கேட்கிறீர்! என்று கேட்டுவிட்டு ஒல்லையூர் நாட்டில் முல்லையில்லா இடத்தினையே நீங்கள் காண்பது அரிது என்று மன்னன் விளக்கினான். நாளை எனக்குத் திருமணம் அதற்குத்தான் இந்த விழாக்கோலம் என்று பாணனிடம் மெல்லச் சிரித்துக்கொண்டே ஒல்லையூர் மன்னன் விழாக்கோலம் ஏன் என்று விளக்கம் தந்தான்.

காலையில் மணவினை நிகழ்ந்தது. பாணனின் இசைகேட்டு மணவிழாவில் பங்கேற்ற மன்னர்கள் அத்தனைபேரும் புகழ்ந்தார்கள். அத்தனைபேரும் புகழ்ந்த புகழ்ச்சியும் தூசு என்கின்ற முறையில் பாணனைக் கட்டித் தழுவி, முத்தமிட்டு. இதுவன்றோ யாழ் மீட்டும் கை' என்று யாழையும் அவனதுகையையும் மீண்டும் மீண்டும் புகழ்ந்தான் மன்னன். பாடினியையும் மன்னனின் மனைவி வாரியணைத்து உச்சி மோந்தாள். பாணனும் பாடினியும் இங்கில்லை! இன்பத் தேர் ஏறி எங்கேயோ பறந்தனர். அன்று மாலையே மன்னனுக்கு முதலிரவு வந்தது. பாணனுக்கும் பாடினிக்கும் முதலிரவு வந்தது. பாணனுக்கும் பாடினிக்கும் மன்னனின் மனதைக் கவர மீண்டும் ஒரு வாய்ப்பு.

காதல் களத்திலே விளையாடியவர்கள் தான் மன்னனும் அவனது துணைவியும். அதனால் அவனை அவள் அறிவாள். அவளை

வண்ணமிகு படைப்புகள்
வர்ணமய உலகம்
அதுவேகோ-ஆப்டெக்ஸ் உள்ளடக்கம்
பட்டுகள் பிரமாதம்
நெசவே நெஞ்சையள்ளும்
குர்தாக்கள்
பெல்பாட்டம்கள்
லுங்கிகள்
சேலைகள்
உங்கள் உள்ளம் ஏங்கும் சிருஷ்டிகள்

கோ-ஆப்டெக்ஸ் படைப்புகள்

கோ-ஆப்டெக்ஸ்

காலப்போக்கிற்கு ஏற்ற
வர்ணஜால ஆடைகள்...

கோ-ஆப்டெக்ஸ்
சகாயமான விலை...

நாணயமான உழைப்பு

தமிழ்நாடு
கைத்தறி நெசவாளர்
கூட்டுறவு சங்கம் லிட்.

பாலசுந்தரம் பில்டிங்ஸ்

எழும்பூர் :: சென்னை-8

# வாழ்க்கைக்கு ஒரு பாடம்!

**எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!**

## சேமிப்புப் பழக்கமே எதிர்காலத்திற்கு ஆக்கம் தரும்.

**சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு, தொடர்வைப்புத் தொகை திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்), வளரும் மாதச் சேமிப்புத் திட்டமும் ஆகும்.**

| | மாதம் செலுத்தும் தொகை | 5 ஆண்டு இறுதியில் கிடைப்பது |
|---|---|---|
| ரெகரிங் டிபாசிட் ... | ரூ. 5 | ரூ. 355 |
| | ரூ. 10 | ரூ. 710 |
| வளரும் மாதச் சேமிப்பு ... | ரூ. 5 | ரூ. 337.50 |
| | ரூ. 10 | ரூ. 675.00 |

தற்போது, 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும் புதிய சலுகை வழங்குகிறது, சிறு சேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராதவிதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.

**இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.**

**இன்றே ஒரு சிறு சேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.**

**சிறு சேமிப்புத் துறை,**
**தமிழ்நாடு அரசு.**


அவன் அறிவான். என்றாலும் முதலிரவு கதவு திறக்கப்படும்போது நாணம் அவளை விடவில்லை. நாணிக்கோணி நிற்கின்ற அவளை; அவளது தோழிகள் பின்னிருந்து அழைத்துக் கொண்டு வரும்போது பாடினி பாடுகிறாள். பாணன் யாழ்மீட்டுகிறான்.

நாணத்திற்காக நாம் பிறந்தோம் சொல்மகளே நீ
நாணத்தினை விட்டெறிந்து போமகளே நீ —நாண
கற்றறியாப் பாடங்காட்டக் காத்திருப்பாரு
கவிதையுலகில் உனையணைத்துப் பறந்திடுவாரு!
கோமகளே என்று உன்னைப் புகழ்திடுவாரு
கோவைக் கனி இதழைமெல்ல வெளுத்திடுவாரு!—நாண
பூமகளே என்று உன்னைப் புகழ்ந்திடுவாரு
புகழ்ச்சியிலே உன்னையவர் மயக்கிடுவாரு
பூவென்று உன்னையவர் முகர்ந்திடுவாரு
பொல்லாத வேலையெல்லாம் செய்திடுவாரு! —நாண
போமகளே என்று உன்னைச் சினந்திடுவாரு
பூமகளின் பூவடிகள் நோவெடுக்க
கோமான்மேல் கோபங்கொண்டு நீ நடந்தால்
பொறுமகளே என்னையென்று அணைத்திடுவாரு —நாண
தாமகளே என்று உன்னைக்கெஞ்சிடுவாரு நீ
தருமுன்னே உன் இதழ்களையவர் மென்றிடுவாரு
பாமகள் என்று உன்னைக் கவிபுனைவாரு
பால்நிலவு என்று உன்னைத் தழுவிக்கொள்ளுவாரு-நாண
பார்மகளே! பார்மகளே! பெற்றவரைப் பார்மகளே
பெருமைபொங்கப்பார்க்கும் அவரைப்பார்மகளே!
பார்மகளைப் பார்த்து நடை நடப்பவளே—நீ
பண்புதனை வளர்த்து வாழப் போமகளே! —நாண

கதவு தாழிடப்படுகிறது. இசையும் நின்றது 'இன்பத்தின் கதவு திறக்கப்பட்டிருக்கும் இல்லையா?' என்று பாணன் பாடினியைக் கேட்க, பாடினி இது என்ன கேள்வி என்று தன் விழியால் பாணனைக் கேட்கிறாள்.

ஒல்லையூரிலேயே பல நாள் தங்கி விட்டதைப் பாடினி பாணனுக்கு உணர்த்துவான் வேண்டி, ஒல்லையூர் மன்னனுக்கு அடிமையாகி விட்டீர்கள் போலிருக்கிறதே! எத்தனை நாளைக்கு இங்கேயே தங்கியிருப்பது நாம்! என்று அவள் கூற; அன்பாக என்னை நடத்த விரும்புகின்றவர்கட்கு நான் அடிமையாக இருக்க விரும்புகின்றேன். அடிமையாக நடத்த விரும்புகின்ற ஒருவனுக்கு அவனது முதல் பகைவனாக இருக்க விரும்புகின்றேன். இந்த முறையில் நான் ஒல்லையூர் மன்னனின் அன்பிற்கு அடிமை என்று பாணன் சொல்ல, இதனைக் கேட்டுகொண்டு மறைந்து நின்ற மன்னன் கண்களில் நீர் மல்க பாணன் பாடினி இருவரின் முன்வந்து நிற்கின்றான்

மன்னன். அவனது அன்பிற்கு மீண்டும் இருவரும் அடிமையாகின்றனர்.

பாணனுடைய நெஞ்சைத் துளைக்கிறது இந்தப் பழைய நினைவுகள். நாடுகாக்கும் நல்லவனின் கூடுவிட்டு ஆவி பிரிந்துவிட்டது. இரவலர்கட்கு இல்லையெனாது ஈயும் புரவலன் புதைகுழிக்குப் போகிறான். வெற்றி அன்றி தோல்வியே காணாத இந்த வீரனின் நாடே அழுகிறது. இவரை இவர் தேற்றுவார் ஆற்றுவார் என்கின்ற நிலையின்றி நாடே அழுதது. சாத்தனின் பிணத்தினை எரித்து விட்டு வீடு திரும்புகிறான் பாணன். அவனைப் பார்த்து 'ஏனழுதாய்?' என்று ஒருவன் கேட்க...இப்படிபட்ட ஒரு நன்றிகெட்ட மனிதனும் வாழ்கிறானே இம்மண்ணில் என்று எண்ணிய அவனுடைய நெஞ்சம் நொந்தது. நொந்த உளத்தோடு வேதனை பொங்கப் பாடிக்கொண்டு தெருவழியே நடந்தான் பாணன். அந்தப் பாட்டு ஒல்லையூர் எல்லையுள் ஒலித்துக்கொண்டே இருக்கிறதாம். இதோ:

"ஏன் அழுதாய் என்று எனைக்கேட்க வந்தாயே
ஏன் அழுதாய் என்று தமிழன்னையை
யார்கேட்டார்—ஏன்
மாத்தமிழ் வீரன்! மக்களின் தலைவன்!
இறந்ததை எண்ணி! கோவெனக் கதறி
தேனினைப் பொழியும்! மலரினைச் சிந்தி
பூங்கொடி அழுததே யாரைக் கேட்டார்—ஏன்
தமிழ்க்காவலன் இறந்ததைக் காணச் சகியாமல்
காதலர் நிலவும் மேகத்தில் மறைந்து
கதறி அழுததால் சிதறிய கண்ணீர்
மழையெனத் தெரிந்தும் யாரதைக்
கேட்டார்—ஏன்
மலரும் அரும்பை மொட்டினில் உதிர்த்து
மரமும் கொடியும் அழுததை யார் கேட்டார்!
குழலும் யாழும் இசையினை மறந்து
புலம்பியழுவதை ஏனென யார் கேட்டார்—
யார் கேட்டார்—ஏன்
பண்பாய்ப் பிறந்தவன் மாய்ந்ததை எண்ணிப்
பைந்தமிழ் பாவையர் செல்விழி சிவக்க
பாடுஎன உருகி வாய்விட்டுப் புலம்பி
அழுவதை யார்போய் ஏன் எனக் கேட்டார்—ஏன்
தன்னுயிர் தன்னிலும் மேலென எண்ணி
தன்னைக் காக்கும் தலைமகன் இழந்து
அன்னைத் தமிழவள் அழுவதைப் பார்த்தும்
ஏன்அழுதாய் என்று எனைக்கேட்க வந்தாயே!-ஏன்
பாவலர் அழுதார் அவர்தம் பாவும் அழுதது!
கூவும் குயிலும் கோவென அழுததே
காவலர் இடிந்த நாடும் அழுததே
கண்களைப் படைத்த யாவரும் அழுதாரே —ஏன்

நன்றிகெட்ட மனிதர்களும் இம்மண்ணில் வாழ்கிறார்களே என்று ஏனழுதாய் என்று கேட்டவனைத் தூற்றிவிட்டு... நடந்து கொண்டு இருக்கிறான். பாணன் வழியில் முல்லைக்கொடி ஒன்று பூத்துப் பொலிவோடு நிற்கிறது. நன்றிகெட்டவர்கள் மனித இனத்திலே மட்டும்தான் என்று எண்ணினேன். அந்த எண்ணத்தை மாற்றிக்கொள் என்று சொல்லுவதுபோல் நீயும் பூத்தாயோ முல்லையே! எனக்கு முல்லை என்றால் கொள்ளை ஆசை. அதனால்தான் இந்த அரண்மனையை முல்லைமனை, என்று சொல்கின்ற வகையில் முல்லையால் அலங்கரித்துள்ளார்கள். முல்லைக் கொடி இல்லாத நில எல்லையை நீங்கள் ஒல்லையூரில் காணமுடியாது என்று சொல்லி பெருமைப்படும் அந்தச் சாத்தன் மறைந்த இந்த நாளில் ஒல்லையூர் எல்லையுள் நீ பூத்திருக்கிறாயே! மலர் விரும்பிச் சூடுகின்ற இளம் மங்கையர்கள் சூடார்! நல்ல இசையை எழுப்புகின்ற யாழிலே பாணன் சூடான்! பாடினி அணியாள்! பின்னெதற்கு நீ இந்த மண்ணிலே பூத்தாய் எனக் கேட்டுவிட்டு பாணன் நடந்துகொண்டே இருக்கிறான் பாடினி பின் தொடர.

அந்தப் பாணனை மீண்டும் காண வேண்டும் என்று துடிக்கின்ற தமிழ் நெஞ்சங்கள் புறநானூற்றிலே குடவாயிற் கீரத்தனார் படைத்து வைத்த இந்த யாழை மீட்டுங்கள், இந்தச் சோகத்தின் சுவையை வேறெந்த மொழியிலும் காணமுடியாது என்கின்ற வகையில்! ஏன் தமிழிலேகூட இப்படியொரு சோகத்தை யாரும் இனி உருவாக்க முடியாது என்கின்ற வகையில்! அந்தப் பாடல் இருப்பதைக் காணலாம். இதோ அந்தச் சோக யாழ்:-

இளையோர் சூடார், வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கி
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே

புற. 242

★

# நமக்கும் நல்லது!
# நாட்டுக்கும் நல்லது!



## பன்னிரண்டு ஆண்டுகளில்
## வருவாய் இரட்டிப்பாகிட
## தமிழக மாநிலத் திட்டக் குழுவின் திட்டங்கள்

சமதர்ம சமுதாய அமைப்புக்கு வழிவகுக்கும்
நிலச் சீர்திருத்தம்!
வழித் தடங்கள் நாட்டுடமை!
ஏழை எளிய மக்களுக்கு
இலவச வீட்டுமனை! நிலப் பட்டா!
பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
உதவிகள்! சலுகைகள்!
பிச்சைக்காரருக்கு மறுவாழ்வு!
குடிசைமாற்று வாரியம்!
கண்ணொளி வழங்கும் திட்டம்!

இப்படி நமது அரசு ஆற்றிடும் பணிகளால்
புதிய வாழ்வு மலர்ந்திட
நாம் செய்ய வேண்டிய கைமாறுதான்

**குடும்பநலத் திட்டம்**

பெருகிடும் மக்கள் தொகையே
இன்றைய பெரும் பிரச்சினை!
எனவே
திட்டமிட்ட குடும்பம் —
நமக்கும் நல்லது! நாட்டுக்கும் நல்லது!

## அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்!
## இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்!

குடும்ப நலத்துறை,
தமிழ்நாடு அரசு.

ஆசிரியர் வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3.
86, திருக்கச்சிநம்பித் தெரு, அல்லி அச்சகத்தில் (போன்: 2970) அச்சிட்டு வெளியிடப்படுகிறது